EASTERN UNIVERSITY
11 OCT 2014

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2011/2012 (ஆகஸ்ட் 2014)

## EDUS 3103 Management theories and practice

நேரம் : 03 மணித்தியாலங்கள்

நீர் விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01.(அ) சிறந்த முகாமைத்துவமானது நிறுவனம் எதிர்பார்க்கும் முடிவுகளை அடைவதற்குக் கொண்டிருக்க வேண்டிய பண்புகளை விளக்குக.
(12 புள்ளிகள்)

(ஆ) குறிக்கோளை அடைவதற்கான முயற்சிகளில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அணுகுமுறைகள் ஐந்தினை உதாரணங்கள் மூலம் விளக்குக.
(13 புள்ளிகள்)

02.(அ) வினைத்திறன் மிக்க முகாமைத்துவம் ஒன்றில் காணப்படும் முகாமைத்துவத் தொழிற்பாடுகளைச் சுருக்கமாக ஆராய்க.
(15 புள்ளிகள்)

(ஆ) முகாமைத்துவச் செயன்முறையில் அடிப்படை மூலகங்களை உதாரணங்கள் காட்டி விளக்குக.
(10 புள்ளிகள்)

03.(அ) ஒரு நிறுவனத்தில் கட்டுப்படுத்தலை மேற்கொள்ளும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களை விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ) தீர்மானம் செய்தலில் பிரச்சினைகள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமையும் காரணிகளை நடைமுறை உதாரணங்கள் மூலம் விளக்குக.
(15 புள்ளிகள்)

04.(அ) ஒரு நிறுவனமானது குறிக்கோள் சார்ந்த முகாமைத்துவத்தை (MBO) பயன்படுத்துவதற்கான காரணங்களைப் பட்டியற்படுத்துக.
(06 புள்ளிகள்)

(ஆ) குறிக்கோள் சார்ந்த முகாமைத்துவம் (MBO) என்பதற்கு பீட்டர் ட்றக்கர் (Peter Drucher) கூறும் வரைவிலக்கணத்தை சுருக்கமாக விளக்குக.
(07 புள்ளிகள்)

(இ) ஒரு நிறுவனத்தில் MBO வினை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகளைச் சுருக்கமாக ஆராய்க.
(12 புள்ளிகள்)

05.(அ) ரெயிலர் (Frederc W.Taylor) இன் விஞ்ஞான முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகளை உதாரணங்கள்மூலம் விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) ஹென்றி பயோல் (Henry Fayol) கூறும் பயன்தரு தன்மையுள்ள நிறுவனத்தின் பொது உண்மைகளை விளக்குக.

(13 புள்ளிகள்)

06.(அ) ஏபிரகாம் மாஸ்லோவின் (Abraham Maslow) தேவைக் கோட்பாட்டை ஒரு நிறுவனத்தின் முகாமைத்துவதுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) புத்தாக்க (Innovative) உணர்வைக் கொண்ட ஸ்தாபனம் ஒன்றிலே கைக்கொள்ளக்கூடிய முகாமைத்துவ உத்திகளை உதாரணங்களின்மூலம் விளக்குக.

(15 புள்ளிகள்)

*****